செ.வெ.எண்: 04/ஜூலை　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　நாள்: 04.07.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மொத்தம் ரூ.3.75 இலட்சம் மதிப்பிலான தீருதவித் தொகைக்கான காசோலையினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (04.07.2016) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றார். அதன் பின்பு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தீருதவித் தொகையினை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள். அவற்றில் தனிநபர் மனுக்களான திருமண நிதியுதவித் திட்டம், முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், ஆதார் அட்டை புகைப்படம் எடுத்தல் உள்ளிட்ட மனுக்களும், பொதுநல மனுக்களான சாலைவசதி, போக்குவரத்துவசதி, பள்ளி வசதி , குடிநீர் வசதி உள்ளிட்ட மனுக்கள் உட்பட மொத்தம் 180 மனுக்கள் வரப்பெற்றன. கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அம்மனுக்களை ஆய்வு செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காண சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

அதன்பின்பு, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட நபர்களான அரசனூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி.சாந்தி என்பவருக்கு ரூ.1,25,000/- தீருதவித் தொகையும், திரு.கோபால் என்பவருக்கு ரூ.1,25,000/- தீருதவித் தொகையும், திரு.தென்னரசு என்பவருக்கு ரூ.1,25,000/- தீருதவித் தொகையும் ஆக மொத்தம் ரூ.3,75,000/- மதிப்பிலான தீருதவித்தொகைக்கான காசோலையினை மேற்கண்ட நபர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.எம்.முருகசெல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.சீ.மகேஸ்வரன் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**